Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 13 ( 26 05 - 1992 ) செவ்வாய்க்கிழமை ஓசை: 98

## புறக்கணிப்பு நிலையில் திறந்த பல்கலைக்கழகம்

யாழ். திறந்த பல்கலைக் கழகம் தற்போது சகல கற்கை நெறிகளிலும் புறக்கணிக்கப்பட்ட துறையாக இருந்து வருகிறதாக கொழும்புச் செய்தி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கையில் உள்ள திறந்த பல்கலைக் கழகங்களுள் தென்னிலங்கை திறந்த பல்கலைக் கழகங்களுக்கே அதிகளவு வெளிநாட்டு உபகரணங்களும் நிதியுதவியும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த வருடங்களாக யாழ் திறந்த பல்கலைக் கழகம் செயற்பட எந்தவித உதவியும் அரசி (6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைத் தடை செய்யுமாறு எனக்கு அழுத்தம் போடப்பட்டது

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

(டில்லி)

விடுதலைப்புலிகளை தடைசெய்யுமாறு தன்மீது அரசியல் அழுத்தம் போடப்பட்டதாகவும், இந்த அழுத்தங்களின் நிமித்தமே புலிகள் மீது நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப் பட்டதாகவும் இந்திய பிரதமர் திரு நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய கூட்டுறவுக்கான இந்திய சபையின் சர்வதேசக் கருத்தரங்கில் கலந்துகொண்ட சிறிலங்கா பிரதிநிதியிடம் இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவ் இவ்வாறு தெரிவித்தார்.

புதுடில்லியில் நடந்த இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்குப் பிரதமர் தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இராப்போசன விருந்தொன்றை வழங்கிக் கௌரவித்தார். அப்போது சிறிலங்காப் பிரதிநிதியுடன் உரையாடிய இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ''இது உங்கள் பிரச்சினை எமது பிரச்சினையல்ல விடுதலைப் புலிகளைத்தடைசெய்யுமாறு என் மீது அரசியல் அழுத்தம் போடப்பட்டது'' என்றார்.

பிரதமர் இவ்வாறு கருத்துத் தெரிவித்த சமயம் தாமும் இதைக் கேட்டுக்கொண்டிருந்ததாக கருத்தரங்கில் சிறிலங்காவின் சார்பில் கலந்து கொண்ட மற்றொரு பிரதிநிதியான கொழும்புப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஷெல்டன் கொடிக்காரா தெரிவித்தார்.

## அம்பாறை அதிரடி படை மீது புலிகள் அதிரடி தாக்குதல்

### அதிகாரி பலி;2 பேர் காயம்

(அம்பாறை)

அம்பாறை திருக்கோவில் பகுதியிலுள்ள கோளாவில் என்னும் தமிழ் கிராமத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிறிலங்கா விசேட அதிரடிப்படை பொலிஸ் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி அந்த இடத்தில் பலியாகியதுடன் இரண்டுபேர் காயமடைந்தனர்.

( 6ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைபறிச்சானில் இராணுவம் துப்பாக்கி சூடு 12 தமிழர்கள் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் கட்டைபறிச்சானில் பன்னிரண்டுதமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொலைப்பட்டனர்.

நேற்று முன்தினம் இப்பகுதியைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டபோதே இப்பன்னிரண்டு தமிழ் மக்களும் பலியாகியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

## புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அகதிகளைக் குடியமர்த்த வேண்டும்

### ஐ. நா. அதிகாரிகளிடம் புலிகள் வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

அகதிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினரால் நடாத்தப்படும் அட்டூழியங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தமிழ் அகதிகள் குடியமர்த்தப்படவேண்டும் இவ்வாறு யாழ். வந்திருக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலய அதிகாரிகள் குழுவினருடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது விடுதலைப் புலிகளினால் வற்புறுத்தப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடிவைத்த ராணுவம் புலிகளின் தாக்குக்குப் பலி

### பத்தமேனியில் சம்பவம்

(யாழ்மாவட்டம்)

அச்சுவேலி பத்தமேனி பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ காவலரணுக்கும் விடுதலைப்புலிகளின் காவலரணுக்கும் இடையில் மிதிவெடிகளை வைக்க இராணுவத்தினர் முயன்றனர்

இச்சம்பவம் கடந்த சனியன்று பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

இவ்இராணுவத்தினர் மீது விடுதலைபபுலிகள் முன்னேறி தாக்குதல் ஒன்றை நடாத்தியபோது ஒரு இராணுவத்தினர் பலியானார் ஏனையோர் ஓடிவிட்டனர்

இவர்களிடமிருந்து ரி-81-1 ரகதுப்பாக்கி 01 இதற்குரிய மகசின்-01, நடுத்தரரவைகள் 30 என்பன கைப்பற்றப்பட்டன.

## தமிழ் நாட்டில் பஸ்சில் குண்டு வெடிப்பு

### 2பேர் பலி; 40பேர் காயம்

தமிழ் நாட்டில் ராஜபாளையம் என்ற நகருக்குச் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் பஸ் ஒன்றில் குண்டு வெடித்து குறைந்தது இருவர் உயிரிழந்தனர். 40 பேர்வரை படுகாயம் அடைந்தனர் பஸ் விருதுநகரை நெருங்கியபோது இந்தக் குண்டு வெடித்தது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்ப் பயணிகள் பஸ்சில் பிரயாணிகள் அதிகமாக இருந்ததால் படுகாயம அடைந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகம் எனக் கூறப்படுகிறது

நேற்று முன்தினம் தஞ்சாவூரில் தொலைக்காட்சி ஒளி பெருக்கி நிலையத்தின் அருகே குண்டு வெடித்ததை தொடர்ந்து நேற்றைய விருதுநகர் குண்டுவெடிப்பு இரண்டாவது சம்பவம் எனக் கூறப்படுகிறது.

## மட்டக்களப்பில்படகுவிபத்து 16 பிரயாணிகள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனைக் குடாவில் படகொன்று கவிழ்ந்ததால் 16 பேர் பலியாகினர். நேற்று முன்தினம் இபபடகு விபத்து ஏற்பட்டது.

மட்டக்களப்பில் பொருள்களை வாங்கிக் கொண்டு கொக்கட்டிச்சோலைக்குச் சென்றுகொண்டிருந்த பலர் இந்த வள்ளத்தில் சென்று கொண்டிருந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 8 காவலரண்கள் தகர்ப்பு இராணுவம் சிதறி ஓட்டம்

### வவுனியாவில் இரு சிப்பாய்கள் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டம் செட்டிக்குளம் தந்திரிமலை வீதியில் உழவு இயந்திரமொன்றில் ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன எட்டுகாவலரண்களும், உழவு இயந்திரமும் விடுதலைப்புலிகளால் எரித்து அழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை 3-15 மணியளவில் செட்டிக்குளம் தந்திரிமலை வீதியில் தொடர்ச்சியாக அமைக்கப் பட்டுள்ள இராணுவ காவல (6 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் காந்தியை கண்டிக்கும் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன

### சிறிபெரும்புதூரில் சம்பவம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைப்பட்ட இடமான சிறிபெரும்புதூரில் அவரது சிராத்த தினமான கடந்த வியாழனன்று ராஜீவ் காந்தியை கண்டிக்கும் துண்டுப் பிரசுரங்களை வெள்ளைநிற வானில் வந்தவர்கள் எறிந்துவிட்டுச்சென்றிருப்பதாக தமிழ் நாடு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் காந்தியை ''பாசிஸவாதி'' என்றும் ''இரத்தக் காட்டேரி'' என்றும் அத்துண்டுப் பிரசுரங்களில் கூறப்பட்டிருந்தது.

சிராத்த தினம் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அங்கு போடப்பட்டிருந்த பாதுகாப்புக் காவலையும் மீறி நுழைந்த வெள்ளை நிற வான் ஒன்றிலிருந்து துண்டுப் பிரசுரங்கள் எறியப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ராஜீவ்காந்தியைக் கொன்றதனு அத்துண்டுப் பிரசுரங்களில் புகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்டம் செட்டிக் குளம் தந்திரிமலை வீதியில் ரோந்து வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்;

- ★ ரி-56 புதியரகதுப்பாக்கி 01
- ★ ரி-81-1 ரக துப்பாக்கி -01
- ★ எஸ். எல். ஆர் -01
- ★ ரி-56 மகசின் -03
- ★ எஸ் எல் ஆர். பைனட்-01
- ★ ஏ கே. கோல்சர் -01
- ★ நடுத்தர ரவைகள் -144
- ★ நேட்டோ ரவைகள் -20
- ★ தலைக் கவசம் -05
- ★ சப்பாத்து சோடி -18
- ★ கிட்பாக் -08
- ★ தொப்பி -09
- ★ பிரவுண் சீட் -04
- ★ தண்ணீர் கான் -01
- ★ இராணுவ பட்டி -12

# குடியிருப்பாளரை துரத்தும் வீட்டுச் சொந்தக்காரர்

(கொழும்பு)

வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களை வேண்டுமென்று விரட்டுவதில் வீட்டுச் சொந்தக்காரர்கள் சிலர் ஈடுபட்டு வருவதாக குடியிருப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கல்கிசை போன்ற பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதாக தெரியவந்துள்ளது.

வாடகைக்கு கொடுப்பதற்கு முன் முற்பணமாக பெறும் பணத்திற்கு எந்த வித பற்றுச்சீட்டுக்களையும் கொடுக்க மறுப்பவர்களே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

குடியிருப்பாளர்கள் மீது வீண்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தும் இவர்கள் இவர்களை பயமுறுத்தி வெளியேற்றுகின்றனராம்.

கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்கும் பட்சத்தில் சாக்குப் போக்குச் சொல்லி ஏமாற்றி விடுகின்றனராம்.

இதனால் இங்கிருந்து வெளியேறி ஆயிரக்கணக்கில் முற்பணம் கொடுத்து வீடெடுத்து இருந்த தமிழர்களின் நிலையும் இதுதானாம். வீட்டுச் சொந்தக்காரர்களால் விரட்டி அடிக்கப் படுகின்றனராம்.

# தமிழ்குழுக்களும் - மு.காங்கிரசும் இடையில் இணக்கமாம்

வடக்கு- கிழக்கு பிரச்சினை தொடர்பாக தமிழ்க்கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே பெரும்பாலும் இணக்க நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்புக்கு அவை உட்பட்டிருப்பதாகவும் அக்கட்சிகளின் மூலம் தெரியவருகிறது.

இதேவேளை வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பின் கீழ் அம்பாறை தொகுதி தனியாக பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் பிரதேச சபைகள் தனியான சுயாட்சிக் கவுன்சிலாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## தவறி விட்டது

23.05.1992 அன்று நாகலிங்கம் பூபாலசிங்கம் என்பவருடைய நீல நிற பாக் ஒன்று பளைக்கும், கொம்படிக்குமிடையில் தவறிவிட்டது அதற்குள் அடையாள அட்டை (381601900 X) பாஸ்போட், சாதகம் 3, புங்குடுதீவு நிவாரண அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், மூக்குக்கண்ணாடி என்பன இருந்தன. இதை கண்டெடுத்தவர்கள் பால விநாயகர் கடைக்கு (கிளிநொச்சி) -OR 93/24, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கும் படி வேண்டுகிறேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2597)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



வீரப்பிறப்பு

1971-03-10

வீரச்சாவு

1991-05-26

### கப்டன் குட்டி றமேஸ்

(தர்மலிங்கம் இரஞ்சன்)

தமிழ்த்தாயின் துயர்கண்டு தவித்திட்டதனயா
விழிபுடனே விடுதலைக்காய் விரைந்திட்ட மறவா
விண்ணுலகம் மண்ணுலகம் வியக்குதடா புலிவீரமறிந்து
நாதியற்ற நம்இனத்தின் நலிவகற்ற நீ எழுந்தாய்
சாதி சனம் வாழ்வுயர சரித்திரம் நீயானாய்.

கட்டுவனில் களம் கண்டு
ஆண்டொன்றானதடா
கலங்குது விழிபிரண்டும்
கற்பனையில் ஓட்டம் கண்டும்
எண்ணுகிறோம் உனை நினைத்து
ஏக்கத்தில் விளிம்பில் நின்றும்
வாட்டுமுன் நினைவு தன்னில்
வாடுகிறோம் சருகாக
தாளாமல் புலம்புகின்றோம்
மனம் தேற்றிடத்தான் வாராயே

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், இயக்க நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தவம் வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

இங்ஙனம்
பெற்றோர், சகோதரிகள், மைத்துனர், மாமனார்.

(சி/4457)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

21-05-1992 கொம்படிப் பாதையால் பயணம் செய்யும் போது சி. நடராசா, தும்பளை கலட்டி பருத்தித்துறை என்பவரது தேசிய அடையாள அட்டையும், ரூபா 8500/- அடங்கிய பணிபர்சும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது போக்குவரத்து சேவை அலுவலகம் முரசுமோட்டையில் ஒப்படைக்கவும். (2588)

### விற்பனைக்கு

*WJ Ave 5 Digital Av Video Mixer (Panasonic) Video Camera VHS Vm-500 E (Hitachi) Si Mixer (National)* ஆகியவை விற்பனைக்குண்டு தொடர்பு:- புலவர் வீடியோ, கோண்டாவில் வடக்கு (2593)

## புதிய கட்சி உதயம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலும், கம்யூனிஸ்ட் கட்சியிலும் முன்னர் இணைந்திருந்த சில சட்டத்தரணிகள் இணைந்து சமூக ஜனநாயகக் கட்சி என்னும் பெயரில் புதிய கட்சி ஒன்றை அமைத்துள்ளனர். இக்கட்சியின் தலைவரான ஹேமந்த விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிக்கையின்படி ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சூழல் தொடர்பான பிரச்சினைகளில் இக்கட்சி கூடுதல் கவனம் செலுத்தும் எனவும், இக் கட்சியின் விஞ்ஞாபனம் விரைவில் பிரகடனப்படுத்தப் படுமெனவும் தெரியவருகின்றது.

## ஊழியர்சங்க அலுவலக திறப்பு விழா

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் தென்மராட்சிக் கிளை அலுவலக திறப்பு விழா 14.06.92 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது இதைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் ஒன்றும் தலைமைச் சங்கத்தலைவர் N. இராமச்சந்திரன் தலைமையில் சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இதற்கு கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி ஆகியஇடங்களில் உள்ள வர்த்தக ஊழியர்கள் அனைவரும் தவறாது சமூகம் கொடுக்குமாறு தலைமைச் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். (88)

## அனுமதிஅட்டைகளை கல்வி திணைக்களத்தில் பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் கணித விஞ்ஞான ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தீவுப்பகுதி, காரைநகர், வெளிமாவட்ட பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை யாழ் கல்வித்திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## பல்கலையில் புதியகற்கைநெறி

கொழும்புப் பல்கலைக்கழகம் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் உள்ளூராட்சி அலுவல்களில் ஒரு வருடப் பட்டப்பின் படிப்பை ஆரம்பித்துள்ளது.

இந்த ஒருவருடக் கற்கைநெறி கடந்த மே 23 சனியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதேசச் செயலாளர்கள் மற்றும் மாகாண சபை உத்தியோகத்தர்கள் என மொத்தம் 25 பேர் இந்தக் கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

# பகிஷ்கரிப்பை சு. கட்சி கைவிடக்கூடுமாம்?

(கொழும்பு)

இனப் பிரச்சனைத் தீர்விற்கென யோசனை ஒன்றை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவைபகிஷ்கரிக்கும் முடிவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைவிடலாம்என்று அக்கட்சியுடன்நெருங்கிய தொடர்புடையவட்டாரங்களைமேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த மூன்று வாரங்களில் சுதந்திரக்கட்சி தனது முடிவை மாற்றிக் கொண்டு தெரிவுக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

## நினைவு கூருகின்றோம்---

## 1992-05-26

1984 - ம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா வயிரவப் புளியங்குளம் பகுதியில் சிறிலங்கா காவற்றுறையினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரகுமான்** (அருளம்பலம் ரகுபதி - இரணை இலுப்பைக்குளம், வவுனியா)

தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1987-ம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட 'ஒப்பறேசன் லிபரேசன்' நடவடிக்கையின் போது வரணிப்பகுதியில் இராணுவத்தினருடனான நேரடிமோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். நாகேந்திரன்** (மகேந்திரன் - மடுக்கோயில், மன்னார்.)

இதே நடவடிக்கையின்போது, உடுப்பிட்டிப்பகுதியில் விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**கப்டன். வீமன்** (நவீனநாயகம் நாகராசா-தாவடி கோயில்)

**2-ம் லெப். ரம்போசிவா** (தங்கவடிவேல். சிவகுமாரன் - உதயசூரியன் புது வீதி, மதவடி, வல்வெட்டித்துறை)

**செட்டி** (சுந்தரம் செல்வராசா - நாவலடி, உடுப்பிட்டி)

**ராஜன்** (சங்கத்தானை, சாவகச்சேரி)

இதே நடவடிக்கையின் போது தொண்டமானாற்றுப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன். அலன்** (நடனசிகாமணி பாக்கியலிங்கம்- பாக்கியலிங்கம் வீதி, வல்வெட்டித்துறை)

யாழ் கொட்டடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக் கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த -

**2-ம் லெப். சேது** (நடராசா சிவசேது- கொட்டடி, யாழ்ப்பாணம்)

யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**செட்டி** (கணபதிப்பிள்ளை நந்தகுமார்-மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்)

திருக்கோணமலை தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

★ **கண்ணன்** (பாலசிங்கம்-கரைச்சித்திடல், தம்பலகமம், திருக்கோணமலை)

வல்வெட்டித்துறை, நெடியகாட்டுப்பிள்ளையார் கோவில் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 15- தமிழர்கள்.

கெருடாவிலில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

மானிப்பாயில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப்பிரிந்த

**நிசாந்தன்/குடல்** (வில்வரட்ணம் ஜெயரட்ணம்- உவர்மலை, திருக்கோணமலை)

1991 ஆம் ஆண்டு மானிப்பாயில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய

**கண்ணன்** (பாலசிங்கம் - தம்பலகமம், திருகோணமலை]

கட்டுவனில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன். குட்டிறமேஷ்** (தர்மலிங்கம் றஞ்சன்- தவம் வீதி. அச்சுவேலி, தெற்கு)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4455)

# இலங்கையில் புலிகளைத் தடை செய்ய தென்னிலங்கையில் பலத்த ஆட்சேபம்

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது தடைஉத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதையடுத்து கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஷெல்ரன் கொடிக்காரா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் பெட்றம் பஸ்தியாம்பிள்ளை, பௌத்த பிக்குவான மாதம்பகம அஸாஜி தேரோ, கத்தோலிக்க மதகுருவான வண. பிதா அல்பிரட் அலெக்சான்டர் ஆகியோர் தெரிவித்த கருத்துகளின் மொழியாக்கம் இது,

### இந்தியாவின் நன்மை கருதியே புலிகள் மீது தடை

இந்தியாவின் நன்மை கருதியே விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் தடை செய்யப்பட்டது. இந்தியாவில் விடுதலைப்புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்டது சம்பந்தமாக சிறிலங்காவில் பலவிதமான ஊகங்களும், வித்தியாசமான கருத்துகளும் நிலவுகின்ற போதிலும் அதன் முக்கியமான பரிமாணம் உணரப்படவில்லை. விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்யவேண்டும் என்று இந்திய அரசு எடுத்த முடிவு உள்ளூர் அரசியல் அடித்தளங்களால மேற்கொள்ளப்பட்டதாகும். இவ்வாறு தெரிவிக்கின்றார் கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் ஷெல்ரன் கொடிக்கார.

தெற்காசியக் கூட்டுறவுக்கான இந்திய சபை புதுடில்லியில் நடத்திய சர்வதேசக் கருத்தரங்கில் பலர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் நானும் பங்குபற்றினேன். இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமது அடக்கமான இல்லத்தில் விசாலமான பசும் புல்தரையில் எமக்கொரு இராப் போசன விருந்தளித்தார். விருந்தாளிகளுடன் அவர் மிகச் சொற்ப நேரம் தான் இருந்தார் என்றாலும், அவரைக் குசலம் விசாரிக்கச் சென்றவர்களிடம் அவர் ஒரிரு வார்த்தைகள் பேசினார். 'புலிகளின் பிரச்சினை உங்களுடைய பிரச்சினை. அது எமது பிரச்சினை அன்று. விடுதலைப் புலிகளைத் தடை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்' என்று பிரதமர் நரசிம்மராவ் கருத்தரங்கில் என்னுடன் கலந்து கொண்ட சிறிலங்காப் பிரதமருடன் உரையாடியபோது கூறியதை நான் செவிமடுத்தேன்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட ஆண்டு தினமான மே 21, 1992 நெருங்கியதும் விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்க வேண்டும்என்ற நிர்ப்பந்தம் அதிகரித்தது. இத்தினத்திற்கு முந்தி புலிகள் மீது ஏதாவதொரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலைக்கு இந்தியப் பிரதமர் தள்ளப்பட்டார். விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற அழுத்தம் தமிழ் நாட்டில்த்தான் அதிகமாகக் காணப்பட்டது. அத்தோடு ஜனதா தளத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமியும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரும் புலிகளைத் தடை செய்யுமாறு கோரிவந்தனர். தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கையோடு ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதும் அவசியமாகியது. விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் நிலை கொண்டிருப்பது தமிழ்நாட்டில் நிலைமையை மோசமடையச் செய்வதாகவும், தமது உயிருக்கு அச்சுறுத்தலானது என்றும் ஜெயலலிதா கருதினார்.

மேலும் சிறிலங்காவுடன் நல்லுறவை வைத்திருப்பது இந்தியாவுக்கு முக்கியமானதாகும். ஆனால் இதேவேளை இந்தியாவுக்குக் கைநிறைந்த வேறு பிரச்சினைகளும் உள்ளன. ஏவுகணைத் தொழில் நுட்பம் தொடர்பாக இந்தியாவும் ரஷ்யாவும் செய்து கொண்ட உடன்படிக்கையினால் அமெரிக்க- இந்திய உறவுகளில் விரிசல் ஏற்பட்டு வருவது இந்தியாவுக்குள்ள பல பிரச்சினைகளில் ஒன்றாகும். அத்துடன் இந்திய- ரஷ்ய உறவுகளை மீளவும் ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியது இன்னுமொரு பிரச்சினையாகும். இத்துடன் காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகள் மற்றொரு புறம். அத்துடன் வரும் ஜூலையில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் இந்தியப் பிரதமரினதும் அரசினதும் கவனத்தை ஈர்த்த வண்ணம் உள்ளது. உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றுடன் நிலையான ஒரு தொடர்பை வகுத்துக் கொள்வது திறந்த சந்தைப் பொருளாதாரம் தொடர்பான சீர்திருத்தங்கள், பொருளாதார நெருக்கடியைச் சமாளித்துக் கொள்ளுதல் போன்ற பிரச்சினைகளுக்கும் இந்திய அரசு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எமது நாட்டில் இன்றுள்ள சூழ்நிலையிலும் இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையிலான பூகோள அரசியல் தொடர்புகளினாலும் இந்தியா எமக்கு ஒரு பெரிய பிரச்சினை(உண்மையாகவும் இருக்கலாம்) என்று சிறிலங்கா மக்கள் எண்ணுகிறார்கள் இந்தியாவின் தலையீடு சிறிலங்காவில் தொடர்ந்தும் இருக்கும் என்று மக்கள் கருதுகிறார்கள் இந்த அச்சம் தவறானதாகும் இந்திய அரசு விடுதலைப்புலிகளைத் தடை செய்தமை இந்திய நாட்டின் எல்லைகளுக்குள்ளும் இந்தியாவின் கடற் பிரதேசத்திலும் மட்டும்தான் செல்லுபடியாகும் இந்தத் தடை சிறிலங்காவின் ஆதிபத்தியத்துக்குட்பட்ட பகுதிகளில் செல்லுபடியாகாது. புலிகளின் மீது இந்தியா விதித்துள்ள தடை சிறிலங்காவை எவ்வகையில் பாதிக்கும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் சமாதான வழியில் இந்தியா விதித்துள்ள தடை ஏற்படுத்தக்கூடிய தாக்கம் ஆகியவற்றைச் சிறிலங்கா அரசே பகுத்துணர வேண்டும் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

### கண்மூடித்தனமாக இந்தியாவைப் பின்பற்றக்கூடாது

உள்நாட்டில் ஏற்பட்ட நிர்ப்பந்தங்களினால்தான் இந்தியா விடுதலைப் புலிகளைத் தடைசெய்தது என்கிறார் வண. மாதம்பகம ஆஸாகி தேரர். ராஜீவ் காந்தியின் கொலை, தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் மற்றும் அவரது அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சி, தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றின் நிர்ப்பந்தங்கள்தான் இந்தத் தடைக்குக் காரணம் என்று விபரிக்கிறார் மாதம்பகம ஆஸாகி தேரர். இந்தியா விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடை சிறிலங்காவுக்கு அனுகூலமானதாஇல்லையா என்பதை இப்போது முடிவுகட்டமுடியாது. ஆனால் சிறிலங்காவுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் இந்தத் தடை விதிக்கப்படவில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இந்திய - சிறிலங்கா உறவுகளை வளர்க்கவேண்டும். சிறிலங்காவுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்திய அரசு புலிகள் மீது தடை விதிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யும்படி இந்தியாவிடம் சிறிலங்கா பல முறைகோரியபோதும் இந்திய அரசு மௌனம் சாதித்து வந்தது. மாறாக இந்தியா புலிகளுக்குப் பல வழிகளிலும் உதவியளித்துவந்தது. முழு உலகிற்கும் இது தெரியும். புலிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டபோதும் அதுக்கு இந்தியா செவிசாய்க்கவில்லை. இந்தியப் படைகளுக்கு எதிராகப் புலிகள் சண்டை செய்தபோது கூட புலிகளைத் தடைசெய்யவேண்டுமென்ற யோசனை இந்தியாவுக்கு ஏற்படவில்லை இப்போது தமது நன்மைகளைக் கருதி புலிகளின்மீது இந்திய அரசு தடைவிதித்துள்ளது.

இந்தியாவைப் பின்பற்றி விடுதலைப் புலிகளுக்கு சிறிலங்காவில் தடைவிதிக்கவேண்டும் என்பதில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை, இந்தியாவைப் பின்பற்றி எமது நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்று கருதுவோமானால், விடுதலைப் புலிகளை தடைசெய்வதற்கு நாம் பின்நிற்கக் கூடாது. எமது அயல்நாடான இந்தியாவை நாம் கண்மூடித்தனமாகப் பின்பற்றவேண்டிய அவசியமுமில்லை.

இந்த நிலையில் புலிகள் மேல் சிறிலங்கா அரசு தடை விதிப்பது சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக அமையும். விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் நாம் யாழ்ப்பாணத்தில் பேசியதன் விளைவாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பது எனது நம்பிக்கை. முக்கியமான இந்தக் கட்டத்தில் சமாதான பேச்சுக்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்த முடிவையும் மேற்கொள்ளக் கூடாது.

எதிர்க்கட்சிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும்என்றுகோருகின்றன. ஆயுதபாணிகளான ஒரு தீவிரவாத இயக்கத்தை சும்மா பெயரளவில் எப்படித் தடைசெய்யமுடியும்? மேலும் வேறு பல ஆயுதக் குழுக்களும் சிறிலங்காவில் உள்ளன. புலிகளைத் தடைசெய்வதானால் அதே நேரத்தில் மற்றக் குழுக்களையும் தடைசெய்தாக வேண்டும். இன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகள்மீது சிறிலங்கா அரசு தடைவிதிக்குமானால் அது எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகிற சம்பவம் போன்றதாகும்.

- இப்படிக் கூறுகிறார் மாதம்பகம அஸாகி தேரர்

### புலிகளைத் தள்ளிவைத்து தீர்வுகாண முடியாது

எந்தவொரு நாடும் தனது நாட்டின் நலன் கருதியும், தனது மக்களின் நன்மை கருதியும் செயற்பட வேண்டும். விடுதலைப்புலிகளைத் தடை விதித்தது மூலம் இந்திய அரசு நாட்டின் பாதுகாப்பையும், முழுமையையும் உறுதி செய்துள்ளது. எந்த வகையிலும் இந்தியா சிறிலங்காவின் நன்மை கருதி விடுதலைப்புலிகளுக்குத் தடை போடவில்லை.

இப்படிக் கூறுகிறார் கொழும்பு புனித பிலிப்நேரியார் தேவாலயக்குரு வண. அல்பிறட் அலெக்ஸ்சாண்டர் அடிகள்.

இன்று நாட்டில் முக்கியமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை இனப்பிரச்சினையாகும். அதனால் எங்களைப் பொறுத்தமட்டில் புலிகளைத் தடை செய்வதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது எமக்கிடையில் உள்ள வேற்றுமைகளைக்களையும் பொருட்டு வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடப்பதில் நாம் அக்கறையாகவுள்ளோம். புலிகளைத் தடைசெய்வதால் இனப் பிரச்சினை தீர்ந்துவிடும்என்று எந்த அறிவுள்ள மனிதனும் கருத மாட்டான்.

புலிகளைத் தடை செய்தாலும், தடை செய்யாவிட்டாலும் நாம் யுத்தத்தை மடியில் கட்டிக்கொண்டு தான் இருக்க வேண்டும். ஆகவே பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமாக நாம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பணி தொடரவேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு நாட்டிலுள்ள வலுவான தீவிரவாத அமைப்பாகும். அதைத்தள்ளிவைத்து நிரந்தர சமாதானத்துக்கான சூழ்நிலையை உருவாக்க முடியாது என்றும் அடிகளார் கூறுகிறார்,

### தடையைவிட போர் பயங்கரமானது

இந்தியா விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கும் என்பது நாம் எதிர்பார்த்ததுதான். செல்வி ஜெயலலிதாவின் ஆதரவை மத்திய மாநில மட்டத்தில் இழந்து விடக்கூடாது என்பதினால்தான் இந்தத் தடை விதிக்கப்பட்டது: அத்துடன் காவிரி நீர் வழங்கல் பிரச்சினையில் ஜெயலலிதாவைத் தணிந்து போக வைப்பதற்காகவே புலிகளின் மீதான இந்தத் தடை நடவடிக்கை என்கிறார் கொழும்பு பல்கலைக்கழக வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞானத் துறைப் பேராசிரியர் பேட்றம் பஸ்தியாம்பிள்ளை.

இந்த நேரத்தில் ஒரு தந்திரமான கேள்வியும் கிளப்பப்படுகிறது. தன்னிச்சையாகச் சுதந்திரத் தமிழ் ஈழத்தைப் பிரகடனம் செய்த வரதராஜப் பெருமாள் இந்தியாவில் இருக்கும்போது புலிகள் மீது ஏன் இந்தத் தடை என்று கேட்கப்படுகிறது. உண்மையில், இந்திய அரசு 'கடதாசிப் புலிகளையும், நிஜப் புலிகளையும்' இனம் கண்டு தண்டிக்க வேண்டும்.

சிறிலங்காவில் அரசு புலிகளுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறது இது புலிகளைத் தடைசெய்வதை விடப் படு பயங்கரமானது என்றார் அவர். — நன்றி ஒப்சேபர்

# தூதரக அதிகாரி கடத்தல்; இந்தியா கடும் ஆட்சேபம்

[டில்லி]

பாகிஸ்தானிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் உள்ள இந்திய ஆலோசகர் ராஜேஷ் மித்தல் பாகிஸ்தான் உளவு அதிகாரிகளால் கடத்திச் செல்லப்பட்டது குறித்து இந்தியா தனது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது. புதுடில்லியிலுள்ள பாகிஸ்தானியப் பொறுப்பதிகாரி நேற்றுமுன்தினம் வெளியுறவு அமைச்சகத்துக்கு அழைக்கப்பட்டு இஸ்லாமாபாத்தின் செயலுக்கு இந்தியாவின் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எச்சரிக்கை தரக்கூடிய விதத்தில் தண்டனை வழங்கப்படவேண்டும் என புதுடில்லி தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் ஒரு விரும்பத்தகாத ஒரு செயல் எனவும், இருநாடுகளிடையேயும் அர்த்தமுள்ள நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் இது அமையவில்லை எனவும் தெளிபுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

ஆறுமணி நேரமாக வலுக்கட்டாயமாகக் கடத்திச்செல்லப்பட்ட ராஜேஷ் மித்தல் மிகக் கொடூரமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, திரும்பத் திரும்ப மின் அதிர்ச்சி கொடுக்கப்பட்டு ஒரு சில ஆவணங்களில் கையொப்பமிடவும் வற்புறுத்தப்பட்டார். ஆனால் ராஜேஷ் மித்தல் அந்த ஆவணங்களில் ஒப்பமிட மறுத்து விட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் திரு. ராஜேஷ் மித்தல் பாகிஸ்தானில் இருந்து 24 மணி நேரத்திற்குள் வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளார். இவ்வேளையில் பாகிஸ்தான் அரசு திரு.மித்தல் ரகசியமான ஆவணங்களை ஒரு பாகிஸ்தானியரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும்போது கைது செய்யப்பட்டார் என்பது ஓர் பொய்யான குற்றச்சாட்டு எனவும் அந்த ஆவணங்களை எங்கு யாரிடம் இருந்து பெற்றுக் கொண்டார் என்பதனை பாகிஸ்தான் அரசு இதுவரை வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ராஜீயத்துறையைச்சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டது குறித்து பாகிஸ்தான் தலைநகரில் உள்ள ராஜீயத்துறைப் பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் மூர்க்கத்தனமானது எனவும், சர்வதேச ராஜீயத்துறையில் நாகரீகமான அணுகுமுறைகளையும், கோட்பாடுகளையும் மீறுவதாக உள்ளதாகவும் அவர்கள் வர்ணித்துள்ளனர்.

# காமதேனு குளிர்பான நிலையம்



கிளி. நகரில் புதிய மெருகுடன் உங்களை அழைக்கிறது

" காமதேனு குளிர்பான நிலையம் "

★ ஸ்பெசல் கிறீம், புறூட் ஐஸ் கிறீம், சொக்கலட் நட்ஸ், சொக்கலட் கிறீம், ஸ்ரோபெரி கிறீம், ஐஸ்கோப்பி, பசன் யூஸ், ஒரேஞ்ஜூஸ், பிளேன் சர்பத், கிறீம் சர்பத், அர்ச்சயா குளிர்சோடா மற்றும் நாவுக்குச் சுவையான சிற்றுண்டி வகைகள்.

★ தங்களது இல்லங்களிலும் பொது இடங்களிலும் நடக்கும் வைபவங்களுக்குத் தேவையான உணவு வகைகளையும் குறித்த தவணையில் சிறந்தமுறையில் தயாரித்து, விருந்துபசார ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

குறிப்பு;- சம்பந்தப்பட்ட இடத்திற்குக் கொண்டு சென்று வழங்கும் சேவையும் உண்டு.

★ பிறந்தநாள் விழா, திருமண விழாக்களுக்கான ஐசிங் கேக் வகைகள் மற்றும் உணவு வகைகளும் தேவைக்கேற்ற அளவுகளில், குறித்த தவணையில், சிறந்த முறையில், மலிவு விலையில் தயாரித்துக் கொடுக்கப்படும்.

விசேடமான முறையில் ஐஸ்கிறீம் வகைகள் பொதி செய்து தூர இடங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய முறையில தயாரிக்கப்படுகின்றது.

வாருங்கள் சுவை தேடுங்கள்
களி - கூருங்கள்

காமதேனு குளிர்பான நிலையம்
யாழ். வீதி, கிளிநொச்சி.

[2596]


# இந்தியாவின் வற்புறுத்தலை நிறைவேற்றுவது கடினம்

- நெவில் கருணாரட்னா

(டில்லி)

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற இந்தியாவின் வற்புறுத்தலை நிறைவேற்றுவதுகடினமானசெயலாகும்என இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் நெவில் கருணாரட்னா தெரிவித்துள்ளார்.

புலிகளின் பூரணகட்டுப்பாட்டிலுள்ள வடமராட்சித்தில் இலங்கை அரசின் அதிகாரம் செல்லுபடியற்ற ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் பிரபாகரன் எங்குள்ளார் என்பது தெரியாத நிலையில் அவரைப்பிடிப்பது என்பது சாத்தியமல்ல அவர் பிடிபடுவாரா என்பதும் நடக்கமுடியாத ஒரு செயல். அவ்வாறு பிடிபட்டால் மாத்திரமே அவரை இந்தியாவிடம் ஒப்படைப்பது பற்றிய கேள்வி எழும் எனவும், பிரபாகரனை ஒப்படைக்க இதுவரை இலங்கையை இந்தியா முறைப்படி இன்னும் கேட்கவில்லை இந்தியப்படையை இலங்கைக்கு அனுப்பி பிரபாகரனை கைது செய்யவேண்டுமென்று கூறுவதெல்லம் பொறுப்பற்ற வாய் கிழியப்பேசும் சில அரசியல் வாதிகளின் கோரிக்கைகள் எனவும் தெரிவித்தார்.

எந்தப்பொறுப்புள்ள அரசும் அப்படியான நடவடிக்கையை எடுக்காது என்றும் அவர் தெரிவித்தார்.


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை கப்டன் அலன்
(நடனசிகாமணி பாக்கியலிங்கம்)

தாயின் மடியில்: 06,05.1962
தாயக மடியில்: 26.05.1987

திதி: 30 - 5 - 92

" தாயக விடியலை தோளில் சுமந்து
தியாக வேள்வியில் தீக்குளித்திடும்
விடுதலைப் புலிகள் அணியுடன் இணைந்து
எடுத்தான் ஆயுதம் எங்கள் பாக்கியம் ''

வ. இ. நடனசிகாமணி,
இரத்தினேஸ்வரி குடும்பத்தினர்,
நண்பர்கள், உறவினர்கள்.

பாக்கியலிங்கம் வீதி,
வல்வெட்டித்துறை.

[2589]


## முகாமைத்துவ தகவல் முறை ஆரம்பம்

முதலாவது முகாமைத்துவ தகவல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மகாவலி ஆலோசகர் திரு டயஸ் குணசிங்கவின் உதவியின் பேரில் முதலாவது முகாமைத்துவ தகவல் முறை ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் பிரகாரம் மாதாந்த காலாண்டு அறிக்கைகளைத் தயாரிக்கும்.

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி ஏஜென்சி, காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு, மகாவலி அதிகார சபை, மகாவலி தொழில் ஊக்க அபிவிருத்தித் திட்டம், தொழில் முதலீடு, தொழில் ஊக்க அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றுக்கே இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பரீட்சை முடிவு வெளி வந்தது

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை நுண்கலை மன்றத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைமுடிகள் நேற்று வெளியிடப்பட்டன.

நான்காம் தரத்திலேஇரண்டு மாணவர்கள் இரண்டாம் பிரிவிலும் 18 மாணவர்கள் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர். மூன்றாம் தரத்திலே இரண்டுபேர் முதலாம் பிரிவிலும் 10 பேர் இரண்டாம் பிரிவிலும் 53 பேர் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றவர். இரண்டாம் தரத்திலே 2 பேர் முதலாம் பிரிவிலும் 6 பேர் இரண்டாம் பிரிவிலும் 44பேர் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றவர். முதலாம்தரத்தில் 11 பேர் முதலாம் பிரிவிலும் 15 பேர் இரண்டாம் பிரிவிலும் 77 பேர் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர்.

(பா)

## பதவி உயர்வு தொடர்பாக சுற்றறிக்கை

(கொழும்பு)

எழுதுநர், நடுத்தர சேவைகளில் முதலாம் வகுப்பிற்கான பதவி உயர்வு வழங்குதல் தொடர்பாக அரசாங்க நிர்வாக மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 12. 3. 92ஆம் திகதி சுற்றறிக்கையில் இல 19/91க்கு மேலதிகமாக பிறிதொரு அறிவித்தலை சகல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அச்சுற்றறிக்கையில் 2-ம் பிரிவில் குறிப்பிடுகின்ற சேவைகளுக்கு மேலதிகமாக மற்றும் நடுத்தர சேவைகளுக்கும் இவ்வாய்ப்பு கிடைக்க உள்ளது. இந்தப் பதவி உயர்வு தொடர்பாக மேலும் பல விபரங்கள் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## 5-ம் ஆண்டு நினைவு

வடமராட்சி ஒப்பரேஷன் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய



வீர ஜனனம்: 25 — 11 — 1968

வீர மரணம்: 26 — 05 — 1987

2 ஆம் லெப். ரம்போ சிவா
(தங்கவடிவேல் சிவகுமாரன்)

ஈழமண் காத்திட தமிழர் மானம் போற்றிட
தரணியெல்லாம் தம்பி பெயர் சொல்லிட
தனயன் பாதை சென்று
கொண்டலட்சியம் குன்றிடா தெங்களின்
கொள்கை வீரனின் காலடி மண்ணிலே
நின்றொரு போர்க்கொடி தூக்குவோம்
நிச்சயம் தாயகம் காப்போம் - என்ற
தனயன் வாக்கமைய லட்சியப் பாதை நோக்கி

உதயசூரியன் வீதி,
வல்வெட்டித்துறை,

(2591)

## 1-ம் ஆண்டு நினைவு

சிறிலங்காப் படைகளுடன் காரைநகரில் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவைத்தழுவிய



வீர ஜனனம்: 22 — 01 — 1974

வீர மரணம்: 12 — 04 — 1991

2 ஆம் லெப். உத்தவா
(தங்கவடிவேல் சந்திரகுமார்)

வீறுநடைபோட்டு வீரகாவியம் படைத்த
வீரத்தின் விளைநிலத்தில்
விதைத்திட்ட வித்துக்களாம்
''ரம்போ சிவாவும் உத்தவாவும்''
இவர்களின் ஆத்மா சாந்தி பெறவும் தனயனின்
லட்சியப் பாதையில் சென்று வீரச்சாவைத்தழுவிய
மாவீரர்களின் ஆத்மா சாந்திபெறவும் என்றும்
வேண்டி நிற்கும்

''போராட்ட வீரன் புதைக்கப்படுகிறான் - அங்கு
போராட்டலட்சியம் விதைக்கப்படுகின்றது''

பெற்றார், சகோதர, சகோதரிகள்,
உற்றார் உறவினர்கள், நண்பர்கள்

## சிந்தனைக்கு

தடுப்பதற்கு அப்பாற்பட்டதைப்பற்றி
கவலைப்படுவதில் அர்த்தம் எதுவும் இல்லை
— ப்யூமான்ட் ஃபிளெட்சர்

ஈழநாதம்

61, வைத்தியராவீதி, யாழ்ப்பாணம் 26-05-1992
தொலைபேசி
ஆசிரிபீடம் 025 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 85

# தீர்வுகள் ஒரு போதும் தட்டில் வர மாட்டா

"எதைச் செய்தால் நாம் சமாதானத்திற்கு வருவோம் என்று விடுதலைப்புலிகள் திட்டவட்டமாகக் கூறவேண்டும்'' என்று தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் கடந்த ஞாயிறு வார மலரொன்றுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் தெரிவித்துள்ளார். மேலும் அவர், ' புலிகள்சொல்கின்றார்கள் தமது நோக்கம் தமிழீழம்தான் என்று. அவ்வாறானால், பேச்சுவார்த்தைக்கு இடமில்லையே. அப்படி என்றால், அவர்கள் எந்த அடிப்படையில் பிரேமதாச, கிறிஸ்தவ குழுவினர், தொண்டமான் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியும்? தமிழீழம்தான் என்றால், ஒருவரும் அதனைத் தட்டில் கொண்டுவந்து தரமாட்டார்கள். போராடித்தான் பெறவேண்டும்'' என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. குமார் பொன்னம்பலம் கொழும்பில் இருப்பதினால் புலிகளின் நிலைப்பாட்டினை அறிந்து கொள்வது சற்றுச்சிரமமான காரியம்தான். இருப்பினும், தம்மை ஒரு அரசியல் கட்சியின் தலைவர் எனக்கூறிக் கொள்ளும் திரு. குமார் பொன்னம்பலம் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்களை கொழும்புப்பத்திரிகைகள் மூலமாவது அறிந்துகொள்ள முடியாமலிருப்பது கவலைக்குரியது.

விடுதலைப்புலிகள் தமது இலட்சியம் தமிழீழம் தான் என்பதை எப்பொழுதும் தெளிவாக வலியுறுத்தி வந்துள்ள வேளையிலும் தமிழ் மக்கள் பாதுகாப்புடனும் சுய கௌரவத்துடனும் வாழக்கூடிய ஓர் அரசியல் தீர்வுத்திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் முன்வைக்குமானால் அதை ஆராயத் தயாராக இருப்பதாக ஒருதடவை அல்ல, பல தடவை தெரிவித்து வந்துள்ளனர்.

அதாவது, தமிழீழம் தவிர்ந்த ஓர் அரசியல் அமைப்பானது தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமானால், அதை விவாதிப்பதற்குப் புலிகள் தயாராக உள்ளனர் என்பதே அதன் பொருளாகும். இதனை, சிறிலங்கா அரசாங்கமும் பௌத்த குருமாரும், கிறிஸ்தவ குருமாரும் தொண்டமானும் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால், திரு குமார் பொன்னம்பலத்தினால் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதேவேளை, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத்தீர்ப்பதற்கென கடந்தகாலத்தில்தமிழர்களினால், பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. திரு குமார் பொன்னம்பலத்தின் தந்தையார் ஜி ஜி. பொன்னம்பலத்திலிருந்து தற்போதைய அமைச்சர் தொண்டமான்வரை தமிழர் பிரச்சினைக்கு பல தீர்வுத்திட்டங்களை முன்வைத்தனர். ஏன், திரு. குமார் பொன்னம்பலம் கூட பல தீர்வுத்திட்டங்களை முன்வைத்திருந்தார். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் அவற்றை நிறைவேற்றவில்லை. அவற்றை உதாசீனம்செய்தனர்.

மேலும், திரு குமார் பொன்னம்பலம் வழங்கிய இப் பேட்டியிலேயே ''இந்நாட்டுப் பேரினவாதிகள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை விரும்புவார்கள் என நான் நினைக்கவில்லை'' எனத் தெரிவித்துள்ளார். இந்நிலையில், புதிய ஒரு சமாசத்திட்டத்தை விடுதலைப் புலிகள் முன்வைப்பதினால் என்ன பயன் ஏற்படப் போகின்றது. இந்நிலையில் தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய சமாசத்திட்டம் எதையும் அரச தரப்பினர் முன்வைத்தால், அதைப் பரிசீலிப்பது என்ற புலிகளின் நிலைப்பாடும் ஏற்புடையதே.

அத்தோடு, தமிழீழம் என்பது யாரும் தட்டில் கொண்டுவந்து தரமாட்டார்கள் என்பது தற்பொழுது தமிழீழமண்ணில் வாழும் சகல பிரஜைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தெளிவாகத் தெரியும். இதன் காரணமாகவே தமிழீழத்திற்காக ஆயிரக்கணக்கான இளைஞர்களும், பெண்களும் ஆயுதம் ஏந்திப் போராடுகின்றார்கள். மக்களும் பெரும் நெருக்கடியின் மத்தியிலும் போராட்டத்திற்கு தம்மால்இயன்ற அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றார்கள்.

ஆனால், கொழும்பிலுள்ள முன்னாள் ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுக்களும், தமிழ் அரசியற் கட்சிகளுமே தமிழீழத்தை யாரும் தட்டில் கொண்டுவந்துநீட்டுவார்களென எதிர்பார்த்தவர்கள். அவ்வாறுகூறி மக்களை ஏமாற்றியவர்கள். இன்றும், தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு யாரும் ஒருதீர்வைத் தட்டில் கொண்டு வந்து தருவார்கள் என எதிர்பார்ப்பவர்கள். இந்நிலையில், திரு குமார் பொன்னம்பலம், தமிழர் பிரச்சினைக்கு யாரும் தமிழீழத்தை மட்டுமல்ல, குறைந்தளவு தீர்வுத்திட்டம் ஒன்றையே தட்டில் கொண்டுவந்து நீட்டமாட்டார்கள் என போராடும் தமிழ் மக்களுக்கு கூறுவதைவிடுத்து கொழும்பில் தம்முடன் தங்கியுள்ள தமிழ்க்குழுக்களுக்கு தெரிவிப்பது பொருத்தமானதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

# ஜெயலலிதா அரசியல் எதிரிகளை திட்டமிட்டுப் பழி வாங்குகிறார்

தமிழ் நாட்டில் முதல்வர் ஜெயலலிதா தனது முதலாவது அரசியல் எதிரியான முன்னாள் முதல்வர் கருணாநிதியை ராஜீவ் காந்தி கொலையோடு தொடர்புபடுத்தக்கூடிய வகையில் பகிரங்க பிரசாரங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளார் இந்நிலையில் சண்டே இதழுக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி வழங்கிய செவ்வியிலிருந்து சில பகுதிகள்.

கேள்வி: விடுதலைப் புலிகளுக்கும்உங்களுக்கும்தொடர்பு இருப்பதாக ஜெயலலிதா அரசாங்கம் சுமத்திவரும் குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன?

பதில்: பஞ்சாப், காஷ்மீர் போன்ற குழப்பம் மலிந்த மாநிலங்களுக்கே தடா சட்டம் அறிமுகமாக்கப்பட்டது. இங்கு அத்தகைய ஒரு



நிலை இல்லை; இருந்தும் தடா சட்டம் தவறான வழியில் அரசியல் எதிரிகளைப் பழி வாங்கும் நோக்குடன் அமுல் செய்யப்படுகிறது. இதனால் நூற்றுக்கணக்கான தி மு க. மற்றும் தி.க. தொண்டர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் இவ்விதம் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் சட்டத்தரணிகளும் கூட.

கேள்வி: உங்கள் ஆட்சிக் காலத்தின் போது உள்துறைச் செயலாளராக இருந்த நாகராஜனின் அறிக்கை உங்களைச் சம்பந்தப்படுத்துகிறதே.

பதில்: அது நாகராஜன் கொடுத்த அறிக்கை என்று கொள்ளப்பட முடியாது. அவ் அறிக்கை தயாரிக்கப்பட்டு நாகராஜனின் கையெழுத்து அவர் காவலில் இருக்கும் போது பெறப்பட்டுள்ளது பொலிசாரால் தயாரிக்கப்பட்ட அவ் அறிக்கை எல்லா தகவல் தொடர்பு சாதனங்கள் வழியாகவும் பரப்பப்பட்டது.

கேள்வி: அந்த அறிக்கையைப் பார்த்து நீங்கள் ஆச்சரியம் அடைந்தீர்களா?

பதில்; ஆம். மறுநாள் காலையிலேயே நான் இவ் அறிக்கையில்தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்து பத்திரிகைகள் மூலம் அறிக்கை வெளியிட்டுவிட்டேன்.

கேள்வி: இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதார மற்றவை என்று கூறுவீர்களா?

பதில்: என் இரண்டு வருட ஆட்சிக் காலத்தின் போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், ஜெயலலிதா அரசுதான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கை மேற் கொண்டதாகவும் ஒரு பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. திமுக அரசாங்கமானது உண்மையான குற்றவாளிகளை இனங்காண வேண்டும் என்பதிலும், தண்டனை வழங்கப்பட வேண்டுமென்பதிலும் உறுதியாக இருந்த அதே வேளை அரசியல் நோக்கங்களுக்காக அப்பாவிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதிலும் மிகக் கவனமாக இருந்தது. திமுக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் அனுதாப அக்கறை கொண்டுள்ளது. ஆனால் அதற்காக எமது கட்சியோ அல்லது ஆட்சியோ எமது இந்த அனுதாப அக்கறையைப் பயன்படுத்தி எந்தத் தமிழ்க் குழுவும் இங்குள்ள நிலைமைகளை சீர்குலைக்கக் கூடாது என்றே கருதி வந்துள்ளது. இதனால் எமக்கு எதிராக ஜெயலலிதா மேற் கொண்ட பிரசாரங்களும் விடுத்த அறிக்கைகளும் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இது ஜெயலலிதா அரசு கூட விடுதலைப் புலிகளை ஆதரித்தது என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

கேள்வி: நீங்கள் பதவியேற்கும்போது இருந்த நிலைக்கும் இப்போதுள்ளநிலைக்கும்அதாவது விடுதலைப் புலிகள் விவகாரத்தைப் பொறுத்தமட்டில் எப்படி இருக்கின்றது என்பதை விளக்க முடியுமா?

பதில்: ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு முன்பாக தி. மு க. வும் சரி, அ. இ. தி. மு. க. வும் சரி விடுதலைப் புலிகளை ஆதரித்தே வந்துள்ளனர் ஏப்ரல் 1991ன் பிற்பகுதியில் ஜெயலலிதா புலிகளைப் பகிரங்கமாக ஆதரித்தார். 29 ஏப்ரல் 1991இல் இந்து பத்திரிகை வெளியிட்ட ஜெயலலிதாவின் அறிக்கையொன்று பின்வருமாறு இருந்தது. ''இலங்கைத் தமிழர்கள் மரியாதையோடும், கௌரவத்தோடும் அச்சமின்றி வாழ்க்கை நடத்த வேண்டும். ஆனால் இனப்படுகொலை இதேகதியில் தொடர்ந்து இடம்பெறுமானால் இந்திரா காந்தி பங்களாதேசப் பிரிவினையின்போது நடந்து கொண்டதைப்போல இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதைப் பற்றி இந்தியா சிந்திப்பது தவறாகாது என்றே நான் கருதுகிறேன்'' இந்த அறிக்கை விடுதலைப் புலிகளின் இலட்சியத்தைக் கூட ஜெயலலிதா ஆதரித்ததை காட்டுகின்றது.

கேள்வி: நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது முன்னைய அரசுகள் விடுதலைப் புலிகள் தொடர்பாகக் கடைப்பிடித்த அதேபோக்கைத்தான் தொடர்ந்தும் கடைப் பிடித்தீர்கள் என்று கூறமுடியுமா?

பதில்: ஆம் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய பிரதமர்கள் சிலருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டேன். ஆனால் இது வெற்றி பெறவில்லை. ராஜீவ் காந்தி இதற்கான அறிவுறுத்தலை முரசொலி மாறன் எம். பிக்கு எழுதிய கடிதம் ஒன்றின்மூலம் தெரிவித்திருந்தார்.

கேள்வி; விடுதலைப் புலிகளிடம் எதனைக் கோரும்படி நீங்கள் அறிவுறுத்தப்பட்டீர்கள்?

பதில்; வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆசனங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாகவும், வரதராஜப் பெருமாளின் தலைமையின் கீழ் விடுதலைப் புலிகளுக்குப் பெருமளவு இடம் ஒதுக்கப்படலாம் எனவும் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டேன். இது தொடர்பாக ராஜீவ் காந்தியும் நானும் பேசியிருந்தோம். ஆனால் இது தோல்வியிலேயே முடிந்தது.

கேள்வி; ஜெயலலிதா வேண்டுமென்றே தவறாக உங்கள்



மீது குற்றம் சாட்டுகின்றார் எனக் கருதுகிறீர்களா

பதில்; நிச்சயமாக. எமது இரண்டு வருட ஆட்சியின்போது ராஜீவ் காந்தி பிரசாரத்துக்காக எட்டுத் தடவைகள் இங்கு வந்தார். ஒவ்வொரு தடவையும் அவருக்குப் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது அவர்பவுத்திரமாக டில்லி திரும்பினார். ஆனால் எமது அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்னர் ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங், மே இருபதாம் திகதிய செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் என்று எவருமே இங்கில்லை. சட்டமும், ஒழுங்கும் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார். ஆனால் மறுநாளே ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார்.

# பென்டகன் அறிக்கை மீளப் பெறப்பட்டது

(டில்லி)

இந்தியா தென்மேற்கு ஆசியப் பகுதிக்குள் தனது எல்லைகளை விஸ்தரித்து மேலாட்சி புரியும் ஆசை கொண்டதாக உள்ளது என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு பென்டகன் வெளியிட்ட ஆவண அறிக்கை கொள்கைத்திட்டத்தில் முன்னர் தெரிவிக்கப் பட்டிருந்த குற்றச்சாட்டு தற்போது நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது

1994-1999 வரையான பாதுகாப்பு திட்ட வழிமுறை என்ற அந்த ஆவண அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்புச் செயலாரால் கையொப்பமிடப்பட்டு பின்னர் பத்திரிகைகளுக்கு இது விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்டன

முன்னதாக இவ் ஆவண அறிக்கையில் தெற்காசியாவிலும், இந்து மாகடல்பகுதியிலும் ஆட்சிசெய்யும் ஆசை பாரதத்திற்கு உண்டு என்று குற்றம் சாட்டப்பட்டதற்கு எதிராக புதுடில்லி தனது கடும் ஆட்சேபத்தை தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய எல்லையில் இரகசிய வானொலி

இந்திய-பாகிஸ்தானிய எல்லையிலிருந்து புதிய இரகசிய வானொலி நிலையம் ஒன்று இயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வானொலி காஷ்மீர் மக்கள் விடுதலைக்காக போராட வேண்டும் என்று மக்களுக்கு அழைப்பு விடுத்து ஒலிபரப்பு நடத்துகிறதென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இந்தியாவின் கோரிக்கைக்கு

# பதிலளிக்க வேண்டியவை சிறிலங்கா நீதி மன்றங்கள்

**- குமார் பொன்னம்பலம்**

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பதானால் குற்றவாளிகளை ஒப்படைப்பது தொடர்பான ஒரு ஒப்பந்தம் முதலில் இரு நாடுகளுக்குமிடையில் இருக்கவேண்டும் இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்குமிடையில் அப்படியான ஒரு ஒப்பந்தம் இல்லாத பட்சத்தில் பிரபாகரனை ஒப்படைக்கும்படி இந்தியா கோரமுடியாது

—இவ்வாறு ஐலண்ட் பத்திரிகைக்கு குமார் பொன்னம்பலம் வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரபாகரனை இந்தியாவிடம் கையளிப்பதற்கான தகுதியான காரணங்கள் உள்ளனவா என்பதை முதலில் சிறிலங்கா நீதிமன்றங்கள் தீர்மானிக்க வேண்டும் இது குறித்து ஒரு மனுவைத் தாக்கல் செய்வதற்கு தேடப்படும் ஆள் சட்டம் மற்றும் சிறிலங்கா பாதுகாப்புத் துறையினரின் காவலில் இருக்க வேண்டும் என்றும்;

எமது நாட்டு நீதிமன்றங்களின் அடிப்படையான அம்சங்களில் ஒன்று. அவை வெறும் ஊகத்தின் பிரகாரம் செயற்படுவதில்லை. ஆகவே குறிப்பிட்ட ஆள் காவலில் வைக்கப்பட்ட பிறகுதான் இந்தியா தன்னிடம் ஒப்படைக்கும்படி கோரிக்கைவிடலாம். சிறிலங்கா ஒரு அரசியல் முடிவை எடுதது்ப் புலிகளை ஒரு குறிப்பிட்ட முறையில் அணுகி இந்தியாவுக்கு உதவும் வகையில் தர்க்க ரீதியன நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அப்படிச் சிறிலங்கா அரசு செய்யாது போனால், இந்தியா ஒன்றும் செய்யமுடியாத ஒரு ஸ்தம்பித மான நிலையிலேயே இருக்கும் என்றும்,

இந்தியாவில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகள் இந்த முறையில் முயற்சி எடுக்க வேண்டும் ஆனால் இந்திய பாதுகாப்பு அமைப்பினர் சிறிலங்காவை நெருக்குவதானால், அது ஜனாதிபதி பிரேமதாசாவின் பிரேதத்தின் மீதுதான் நடைபெற முடியும் என்பதை நான் உணர்வேன் என்றார் குமரர் பொன்னம்பலம்.

## ஐ. நா. அதிகாரிகளை ஒன்றிய பிரதிநிதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளுக்கான ஐ நா சபையின் பிரதிநிதிகளை யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று சந்தித்து உரையாடினார்கள்.

நேற்று நண்பகல் 1 30 மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வடக்கில் தற்போது நிலவும் பொருளாதாரப்பிரச்சினைகள், மருந்துத்தட்டுப்பாடு, போசாக்கின்மை போன்றவைபற்றி எடுத்துவிளக்கியதுடன் தற்போது அகதிகளாக உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் தங்கியுள்ள 64 ஆயிரம் குடும்பங்களுக்கு போதிய சுகாதார வசதிகள் கிடைக்காத நிலையில் அவதியுறுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ச,க,75)

## 32,000 குடும்பங்களுக்கு 4,000ரூபா நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்ட இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட சுமார் முப்பத்திரண்டாயிரம் குடும்பங்களுக்குஉற்பத்தித்திறன் முயற்சிக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கிறது.

கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொண்டு விட்டார் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. இதற்கு தேவையான நிதி மிக விரைவில் எடுத்துவரப்பட இருக்கிறது பாதிக்கப்பட்ட மேற்படி மக்களுக்கான கொடுப்பனவுகள் நீண்ட காலம் வழங்கப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா நாலாயிரம் ரூபா வீதம் விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (க)(ச)

### புலிகளின்

நேற்று காலை 10 30 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இப்பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் தரப்பில திரு. யோகி, திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் தரப்பில் திரு. நிக்கல்ஸ் லூயில் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் இருந்து கட்டாயமாக அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டது குறித்தும், யுதத சூழலில் சிறிலங்காவின் இராணுவகட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பாதுகாப்பற்ற நிலையில் அகதிகள் முகாம்களில் குடியமர்த்தப் படுவது குறித்தும் விடுதலைப்புலிகள் தரப்பில் கண்டனமும் ஆட்சேபனையும்தெரிவிக்கப்பட்டது

அத்துடன் அகதிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் கெடுபிடிகள் குறித்தும் இவ் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது எனவே வடமாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் அகதிகள் குடியமர்த்தப்படுவதன் மூலம் இவ்வாறான நிலையைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் தமிழ்நாட்டில் இருந்து நாடு திரும்பும் அகதிகளுக்கு வேண்டிய நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் விடுதலை புலிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்திக் கூறினர்.

விடுதலைப்புலிகளின் மேற்படி கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் இக் கோரிக்கைகள் குறித்து தமது தலைமை அலுவலகத்துக்குத் தெரியப் படுத்துவதாக உறுதியளித்தனர். (க,ச)

## உதைபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொருபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரையிறுதிப் போட்டி இன்று யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறவுள்ள இப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் அணி மோதவுள்ளது

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

திருமலைநட்சத்திரம் விளையாட்டுச்சழக முதலாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏழு பேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின்வரிசையில் இன்று மாலை 3 30மணிக்கு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்தோமஸ்விளையாட்டுகசழகமும், 4 30 மணிக்கு தோப்புக்காடு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காரை விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன இன்றைய இம்மோதல் இரண்டாவது சுற்றின் ஐந்தாவதுநாள் நிகழ்வு என்பது குறிப்பிடத் தக்கது.

## மாவீரர் நினைவு கூரும் விழா

(புங்குடுதீவு)

கடந்த வருடங்களில் வைகாசி மாதத்தில் வீரச்சாவடைந்த தீவகப் பகுதியைச் சேர்ந்த கப்டன் சுந்தர் வீரவேங்கைகள் பகீன், செந்தில், நடேஷ், உஷா, அலெக்ஸ், நிதி,அமல், தேசிங்கன் ஆகிய ஒன்பது மாவீரர்களையும் நினைவு கூர்ந்து நடாத்தப்படும் மாவீரர் நினைவு கூரும்விழா இம் மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை இரவு 8 00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய அரங்கில் நடைபெறும் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களின் உரைகளுடன் பல கலை நிகழ்ச்சிகளும் இவ் விழாவில் இடம் பெறும் (22)

### 8 காவலரண்கள்

ரண்களுக்கிடையில் உழவு இயந்திரமொன்றில் 20க்கு மேற்பட்ட இராணுவத்தினர் ரோந்து வந்து கொண்டிருந்தனர்.

இவ் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர் அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர் இத் தாக்குதல் சுமார் 15 நிமிடங்கள் நீடித்தது.

புலிகள் தரப்பில் சேதமெதுவும் இல்லை இத் தாக்குதல் நடந்த ஒரு மணி நேரத்தின் பின் வந்த சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று அப்பகுதியில் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டது.

### அம்பாறை

இத்தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 30 மணியளவில் இடம் பெற்றது

தாக்குதலின் போது இறந்தவர் பொலிஸ் அதிகாரியான ஏ.ஜி.அத்துக்கோரள ஆவார். எப.எதிரிசிங்க,எஸ். விஜயசிங்க ஆகியோர் காயமடைந்தவர்கள் ஆவர்.

### புறக்கணிப்பு

னால் வழங்கப்படவில்லை.

இதே வேளை அண்மையில் பத்திரிகையாளர் பயிற்சி நெறிக்கும், சமூக கற்கை நெறிக்கும் யாழ் திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய தென்பகுதி திறந்த பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளமையும் தெரிந்ததே. (03)

## வீரச்சாவு
### கப். மதியழகன்



திருக்கோணமலை மாவட்டம் மூதூர் பச்சைநூல் இராணுவ முகாமிலிருந்து கடந்த சனிபன்று ரோந்து வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கப்டன் மதியழகன் (அரி-ஏகாம்பரம்செங்காதரன் சிவன்வீதி, திருக்கோணமலை) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்

இவருக்குதமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

### அன்பளிப்பு

(மண்டைதீவு)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் நடாத்தும் ஊழியர் இலவச வைத்திய சேவைக்கு தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் தங்கம்மா அப்பாக்குட்டி 5000 ரூபா அன்பளிப்பாக வழங்கியுள்ளார் இதை இச்சங்கத்தின் தலைவர்என் இராமச்சந்திரன் தெரிவித்தார்-

### பாகிஸ்தானில்

## தூதரக அதிகாரிவிசாரணை; இந்தியா பதிலடி

(டில்லி)

பாகிஸ்தானின் சிரேஷ்ட இராஜதந்திரிகள் இருவரை 48 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்தியா உத்தரவிட்டுள்ளது

சைத சயாத் மகமூத். சப்பருல் ஹசன் ஆகிய இராஜதந்திரிகளும் இந்கியாவின் பாதுகாப்பிறகுதெளிவாகவும்திட்டவட்டமாகவும் ஊறுவிளைவிக்கும் செயல்களில ஈடுபட்டு வந்தார்கள் எனவும் அவர்கள்விரும்பத்தகாதவர்களாக அறிவிக்கப்பட்டுவிட்டதாகவும்இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்கினம் பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரக அதிகாரிராஜேஸ் மித்தல் என்பவர்பாகிஸ்தானியபுலனாய்வு துறையினரால் விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதற்கும் அவர் விரும்பத் தகாதவராக அறிவிக்கப்பட்டதற்கும் பதிலடியாகவே இந்தியா இந் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பில்

அளவுக்கு அதிகமான பிரயாணிகள் இந்த வள்ளத்தில் ஏற்றப்பட்டதாலேயே இவ்விபதது ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலைவரை எட்டுச்சடலங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப் பட்டதாகவும் தேடுதல் தொடரிவகாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள் யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

## அறிவித்தல்

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்
லங்கா சீமெந்து நிறுவனக்கிளை

### விசேட பொதுச்சபைக் கூட்டம்

27 - 05 - 92 காலை 9.30 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியில் நிறுவனத்தின் பொதுமுகாமையாளரினால் 21. - 05 - 92 அன்று ஓர் கடிதம் எமது தலைவரிடம் கையளிக்கப்பட்டது. இதில் 07 - 06 - 92 அன்று தொழிற்சாலையை மீள் ஆரம்பிப்பதற்கு தொழிலாளர்கள் ஆயத்தமாக இருக்கும்படி இக்கடிதம் தனித்தனியே ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட உள்ளது. ஆகவே இது சம்பந்தமாக ஆராய்வதற்கு சகல தொழிலாளர்களையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

[2600] - செயலாளர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.